தாம்சன்–ஈஸ்ட் கோஸ்ட் எம்ஆர்டி பாதையில் கூடுதலாக ஒரு நிலையம்

தேச நிறுவனர்கள் நினைவிட ரயில் நிலையம் உருவாகும்

தாம்சன்–ஈஸ்ட் கோஸ்ட் எம்ஆர்டி ரயில் வழித்தடத்தில் தஞ்சோங் ரூ, கார்டன்ஸ் பை தி பே நிலையங்களுக்கு இடையில் கூடுதலாக ஒரு ரயில் நிலையம் அமைக்கப்படும் என்று நிலப் போக்குவரத்து ஆணையம் அறிவித்துள்ளது.

அந்தக் கூடுதல் நிலையத்திற்கு 'தேச நிறுவனர்கள் நினைவிட நிலையம்' என்று பெயர். அது ஐந்து ஹெக்டர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு வரும் நினைவிடத்திற்குப் பக்கத்தில் அமைந்திருக்கும். இரண்டுமே 2025ல் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களுக்குச் சேவையாற்றத் தொடங்கும்.

அந்த இடத்தில் ஒரு புதிய எம்ஆர்டி நிலையத்தை அமைப்பதற்கான பொறியியல் பணிகள் முன்னதாகவே கணிக்கப்பட்டு இடம்பெற்றிருந்தன. ஆனால் அந்தப் புதிய நிலையம் பற்றி முன்பு அறிவிக்கப்படவில்லை.

தேச நிறுவனர்கள் நினைவிடத்திற்கான திட்டம் 2017ல் அறிவிக்கப்பட்டதுதான் அதற்குக் காரணம். புதிய கூடுதல் நிலையத்தைக் கட்டுவதற்கான $242.4 மில்லியன் ஒப்பந்தம் 'சைனா ரயில்வே ஃபர்ஸ்ட் குரூப்' என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு இருக்கிறது.

இந்த ஆண்டு பிற்பகுதியில் கட்டுமானப் பணி தொடங்கும் என்றும் ஆணையம் தெரிவித்துள்ளது. தாம்சன் ஈஸ்ட் கோஸ்ட் ரயில் வழித்தடத்தின் மரினா பகுதி 2021ல் செயல்படத் தொடங்கும்.

அதற்கு நான்கு ஆண்டுகள் கழித்து, தேச நிறுவனர்கள் நினைவிட நிலையம் பொது மக்களுக்குச் சேவையாற்றத் தொடங்கும். இதே காலகட்டத்தில் அந்த நினைவிடமும் திறக்கப்பட்டு விடும் என்று ஆணையம் தெரிவித்து இருக்கிறது.

நிலம் அகழும் இயந்திரத்தில் ஏறி ஓட்டிப் பார்க்கும் போக்குவரத்து மூத்த துணை அமைச்சர் ஜனில் புதுச்சேரி (இடது). **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

தேச நிறுவனர்கள் நினைவிடம் தோட்டம் ஒன்றில் அமைந்திருக்கும். அந்தத் தோட்டத்தில் உள்ளரங்குக் கலைக்கூடம் ஒன்றும் கட்டப்படும். நிரந்தரமான அல்லது தற்காலிகக் கூடங்களும் அங்கு இருக்கும். வருகையாளர் நிலையம் ஒன்றும் பலநோக்கு அறைகளும் அங்கு அமைந்திருக்கும்.

பள்ளிக்கூடக் கல்வி சுற்றுலாக்களுக்கும் குடியுரிமை வழங்கும் நிகழ்ச்சிகளுக்கும் அவை பயன்படுத்தப்படும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தொடங்கி சுதந்திரம் அடைந்து ஒரு சில ஆண்டுகள் வரையிலான காலகட்டத்தை அந்த நினைவிடம் உள்ளடக்கி அமைந்திருக்கும்.

சிங்கப்பூரின் வளர்ச்சி மற்றும் முக்கியமான சம்பவங்கள் பற்றிய கதைகளைப் பூங்காவில் காணலாம்.

தாம்சன்–ஈஸ்ட் கோஸ்ட் எம்ஆர்டி வழித்தடத்தில் காத்தோங் பார்க் ரயில் நிலையம் பற்றிய தகவல்களை ஆணையம் வெளியிட்டது. அந்த நிலையம் ஒன்று மற்றொன்றின் மேல் அமைந்தாற்போல் இரண்டு தளமேடைகளைக் கொண்டதாக இருக்கும் என்று ஆணையம் கூறியது.

இதனிடையே, காத்தோங் பார்க் ரயில் நிலைய கட்டுமான இடத்திற்கு நேற்று சென்ற போக்குவரத்து மூத்த துணை அமைச்சர் ஜனில் புதுச்சேரி, அங்கு நிலம் அகழும் இயந்திரம் ஒன்றில் ஏறி ஓட்டி பார்த்தார்.

புதிய நிறுவனர்கள் நினைவிட நிலையம் வருகையாளர்களுக்குப் புதிய பயணத் தெரிவை வழங்கும் என்று திரு ஜனில் புதுச்சேரி தமது ஃபேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்தார்.

தாம்சன் ஈஸ்ட் கோஸ்ட் வழித்தடத்தின் முதல் கட்டம் இந்த ஆண்டு பிற்பகுதியில் திறக்கப்படும். இதில் மூன்று நிலையங்கள் இருக்கும். இரண்டாவது கட்ட பணிகள் 80% முடிந்துவிட்டன. இது 2020ல் திறக்கப்படும். 2021ல் மூன்றாவது கட்டம் சேவைக்குத் திறந்துவிடப்படும்.

பிறகு 2023ல் தஞ்சோங் ரூவிலிருந்து பேஷோர் வரைப்பட்ட கிழக்குப் பகுதி திறக்கப்படும். பிடோக் சவுத்திலிருந்து சுங்கை பிடோக் வரை செல்லும் கடைசிக் கட்டம் 2024ல் தயாராகிவிடும். 2030ல் சாங்கி விமான நிலையத்தின் முனையம் 5 தயாராகிவிடும். அப்போது இந்த வழித்தடம் அந்த முனையம் வரை நீட்டிக்கப்படும் வாய்ப்பும் இருக்கிறது.

உற்பத்தித்துறை பொருளியலின் மிக முக்கிய அங்கம்

உற்பத்தித்துறை பொருளியலின் முக்கிய அங்கம் என்று பொருளியல் வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் சங் காய் ஃபோங் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரின் முதிர்ச்சி அடைந்த பொருளியலை உற்பத்தித்துறை வலுப்படுத்துவதாக அவர் கூறினார். உற்பத்தித்துறைக்குத் தேவையான திறன்கள், மற்ற துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் அதில் சேர்ந்து பணியாற்ற எளிமையாக்குகிறது என்று திரு சங் கூறினார்.

உற்பத்தித்துறை சிங்கப்பூரின் மொத்த பொருளியலில் 20 விழுக்காடு பங்கை வகிக்கிறது. சிங்கப்பூரில் உள்ள வேலைகளில் 14 விழுக்காடு உற்பத்தித்துறை தொடர்பான வேலைகள் என்று 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பொருளியல் வளர்ச்சிக் கழகத்தில் இணைந்த திரு சங் கூறினார்.

திறன்கள் அற்ற, ஆனால் வேலைக்காகக் காத்திருக்கும் ஊழியரணியைச் சமாளிக்கும் நோக்கில் உற்பத்தித்துறைக்கு சிங்கப்பூர் முக்கியத்துவம் கொடுத்ததாக அவர் கூறினார். பொருளியல் மந்தநிலை ஏற்படும் போது சில துறைகள் பாதிக்கப்படும். அவ்வாறு பாதிக்கப்படும் துறைகளில் வேலை செய்வோருக்கு உற்பத்தித்துறையில் வேலை கிடைக்கும் என்றார் அவர்.

மற்ற துறைகளைப் போல இல்லாது, உற்பத்தித்துறைக் காகத் தேவைப்படும் திறன்களை ஊழியர்கள் மிக எளிதில் கற்றுக் கொள்ளலாம் என்றார் திரு சங்.

"நிபுணத்துவ வேலை மாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது எளிதான காரியமல்ல," என்று நிபுணர்கள், மேலாளர்கள், நிர்வாகிகள் ஆகியோருக்குப் புதிய திறன்களைக் கற்றுக் கொடுக்கும் சிங்கப்பூர் ஊழியரணியின் திட்டத்தைப் பற்றி அவர் கூறினார்.

உற்பத்தித்துறையில் உள்ள வேலைகளுக்குத் தேவையான திறன்களைப் பற்றி எளிதில் அறிந்துகொண்டு அவற்றைக் கற்றுக்கொள்ளலாம்.

ஆனால் மற்ற துறைகளில், உதாரணத்துக்கு மக்கள் கட்டமைப்பு போன்றவற்றில் நிலைமை அவ்வாறு இல்லை என்றார் அவர்.

"சேவைத் துறையிலிருந்து உற்பத்தித்துறைக்கு மாறி வெற்றி பெற்றவர்கள் இருக்கிறார்கள். வேலை இழந்து, உற்பத்தித் துறைக்கு மாறி தொழிற்சாலைகளுக்கு நிர்வாகியானவர்களும் உள்ளனர்," என்றார் திரு சங்.

"உயர்நிலை உற்பத்தித் துறையை நோக்கி சிங்கப்பூர் பொருளியலை பொருளியல் வளர்ச்சிக் கழகம் கொண்டு செல்கிறது. அதனால் உயர்தர வேலைகளை உருவாக்க கழகம் கவனம் செலுத்தி வருகிறது," என்று திரு சங் கூறினார்.

கடந்த சில ஆண்டுகளில் சிங்கப்பூருக்குக் கிடைத்து வரும் வெளிநாட்டு முதலீடுகளில் மாற்றம் இல்லாதபோதிலும் உயர்தர வேலைகள் உருவாக்கப்படுவதால் முன்பைவிட குறைந்த அளவிலான வேலைகள் உருவாக்கப்படும் என்றார் அவர்.

"அதிகமான வேலைகளை உருவாக்க எங்களுக்கு அழுத்தம் இல்லை. நமது ஊழியரணியின் வளர்ச்சி சொல்லிக்கொள்ளும் அளவுக்கு இல்லாததே இதற்கு காரணம்," என்றார் திரு சங்.

ஊழியரணியைவிட கூடுதல் வேலைகளை உருவாக்கினால் பொருளியல் பாதிக்கப்படும் என்று திரு சங் கூறினார்.

ஜனவரி 14ல் வெளிவரும் 'ஒ' நிலை தேர்வு முடிவுகள்

ஜிசிஇ சாதாரண நிலை தேர்வின் முடிவுகள் இம்மாதம் 14ஆம் தேதியன்று வெளியிடப்படுகின்றன.

கடந்த ஆண்டு சாதாரண நிலை தேர்வு எழுதிய மாணவர்கள் தங்களுடைய தேர்வு முடிவுகளை அவர்களது பள்ளிகளில் பிற்பகல் 2 மணிக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தனியார் மாணவர்களுக்குத் தபால் மூலம் தேர்வு முடிவுகள் அனுப்பி வைக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்தது.

தனியார் மாணவர்களின் தேர்வு முடிவுகள் தேர்வுக்காகப் பதிவு செய்தபோது தெரிவிக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்.

சிங்கப்பூர் தேர்வுகள் மற்றும் மதிப்பீடு வாரியத்தின் இணையப்பக்கத்துக்குச் சென்று சிங்பாஸைப் பயன்படுத்தி தங்கள் தேர்வு முடிவுகளைத் தனியார் மாணவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

தொடக்கக்கல்லூரிகள், மில்லேனியா கல்விக் கழகம், பலதுறைத் தொழிற்கல்லூரிகள் அல்லது தொழில்நுட்பக் கல்விக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் மாணவர்கள் கூட்டு மாணவர்கள் சேர்க்கையின் வழி விண்ணப்பிக்கலாம்.

மாணவர்கள் அடுத்த திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியிலிருந்து இம்மாதம் 18ஆம் தேதி மாலை 4 மணி வரை கூட்டு மாணவர் சேர்க்கையின் வழி விண்ணப்பம் செய்யலாம்.

கூடுதல் விவரங்களுக்குக் கூட்டு மாணவர் சேர்க்கையின் இணையத்தளத்துக்குச் செல்லலாம்.

கூட்டு மாணவர் சேர்க்கையின் முடிவுகள் இம்மாதம் 31ஆம் தேதி வெளியிடப்படும்.

முடிவுகளைக் கூட்டு மாணவர் சேர்க்கையின் இணையத்தளம் வழி தெரிந்து கொள்ளலாம்.

அல்லது விண்ணப்பம் செய்தோரின் கைபேசிக்கு முடிவுகள் குறுந்தகவல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

தொடக்கக்கல்லூரிகள், மில்லேனியா கல்விக் கழகம் ஆகியவற்றில் சேர்ந்து பயில இடம் கிடைத்தவர்கள் அடுத்த மாதம் 1ஆம் தேதியன்று அந்தந்தப் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டும்.

பலதுறைத் தொழிற்கல்லூரிகள் அல்லது தொழில்நுட்பக் கல்விக் கழகங்களில் இடம் கிடைத்தவர்களுக்குப் பள்ளியில் சேர்வது தொடர்பான கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

எல்டர்ஷீல்டை அரசாங்கம் நிர்வகிக்கும்

2021ஆம் ஆண்டிலிருந்து எல்டர்ஷீல்டு காப்புறுதித் திட்டத்தை அரசாங்கம் நிர்வகிக்கும் என்று சுகாதார அமைச்சு நேற்று அறிவித்தது.

எல்டர்ஷீல்டு கடுமையான உடற்குறையுள்ளோருக்கான காப்புறுதித் திட்டமாகும்.

அவிவா, கிரேட் ஈஸ்டன், என்டியுசி இன்காம் ஆகிய தனியார் காப்புறுதி நிறுவனங்கள் எல்டர்ஷீல்டு திட்டத்தைத் தற்போது நிர்வகித்து வருகின்றன.

எல்டர்ஷீல்டு காப்புறுதித் திட்டத்தை வைத்திருப்போர் அத்திட்டத்தை அரசாங்கம் ஏற்று நடத்தும்போது கேர்ஷீல்டு லைஃப் காப்புறுதித் திட்டத்துக்கு மிக எளிதில் மாறலாம் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது.

அரசாங்கத்தின் கட்டாய காப்புறுதித் திட்டமான கேர்ஷீல்டு லைஃப் அடுத்த ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

30 வயதிலிருந்து 40 வயது வரையிலானவர்கள் அதை கட்டாயம் வாங்க வேண்டும்.

தற்போதைய கட்டாயமற்ற எல்டர்ஷீல்டு காப்புறுதித் திட்டத்துக்குப் பதிலாக கேர்ஷீல்டு லைஃப் காப்புறுதித் திட்டம் நடப்புக்கு வருகிறது.

1979ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்பு பிறந்தோர் 2021ஆம் ஆண்டிலிருந்து கேர்ஷீல்டு லைஃப் காப்புறுதித் திட்டத்தில் இணையலாம்.

கேர்ஷீல்ட் லைஃப் காப்புறுதித் திட்டத்துக்கு மாற விரும்பாதவர்கள் எல்டர்ஷீடு காப்புறுதித் திட்டத்தைத் தொடர்வர்.

அவ்வாறு செய்பவர்கள் கேர்ஷீல்டு காப்புறுதித் திட்டத்தால் கிடைக்கும் அனுகூலங்களைப் பெற தகுதி பெறுவர்.

எல்டர்ஷீல்டு காப்புறுதித் திட்டத்தை அரசாங்கம் லாப நோக்கமற்ற அடிப்படையில் நடத்தும் என்றும் காப்புறுதி வாங்குவோரின் சந்தா தொகைக் கழிவுகள் தொடரும் என்றும் அமைச்சு கூறியது.

இணைக்கப்பட்ட தொடக்கக்கல்லூரிகளின் முதல் நாள்

இணைக்கப்பட்ட தொடக்கக் கல்லூரிகள் நேற்று தொடங்கின. தெம்பனிஸ் தொடக்கக்கல்லூரியும் மெரிடியன் தொடக்கக்கல்லூரியும் இணைந்து தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக்கல்லூரி என்று அழைக்கப்படுகிறது.

மெரிடியன் தொடக்கக்கல்லூரியின் பாசிர் ரிஸ் வட்டாரக் கட்டடத்தை இணைக்கப்பட்ட கல்லூரி பயன்படுத்துகிறது.

ஆண்டர்சன் சிராங்கூன் தொடக்கக்கல்லூரி, ஜூரோங் பைனியர் தொடக்கக்கல்லூரி, ஈசூன் இன்னோவா தொடக்கக் கல்லூரி ஆகிய இணைக்கப்பட்ட கல்லூரிகளும் நேற்று தங்கள் கல்வியாண்டைத் தொடங்கின.

சிங்கப்பூரின் பிறப்பு விகிதம் குறைந்து வருவதால் நான்கு தொடக்கக்கல்லூரிகளையும் இரண்டிரண்டாக இணைக்கப் போவதாக 2017ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கல்வி அமைச்சு அறிவித்தது.

ஒன்றிணையும் இரு தொடக்கக்கல்லூரிகளின் பெயர்களையே இணைக்கப்படும் தொடக்கக் கல்லூரிகளுக்குச் சூட்டப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒன்றிணையும் இரு தொடக்கக்கல்லூரிகளில் முதலில் நிறுவப்பட்ட தொடக்கக்கல்லூரியின் பெயர் முதலில் வரும் என்று அறிவிக்கப்பட்டது.

மற்ற பள்ளிகளைப் போலவே கல்லூரிகளிலும் பாடங்கள் தொடங்குவதற்கு முன்பு மாணவர்கள் கொடியேற்று விழாவில் பங்கெடுப்பது வழக்கம். கல்லூரியின் முதல் நாளான நேற்று நடைபெற்ற கொடியேற்று விழா தனிச்சிறப்பு வாய்ந்ததாக அமைந்தது.

கல்லூரிகள் இணைக்கப்பட்டு முதல்முறையாகக் கொடியேற்று விழா நடைபெற்றது. தெம்பனிஸ் மெரிடியன் தொடக்ககல்லூரியின் முதல் கொடியேற்று விழாவை நேரில் காண ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் நாளிழின் செய்தியாளர்கள் அங்கு சென்றிருந்தனர்.

அக்கல்லூரியின் மாணவர்களும் ஆசிரியர்களும் நாட்டுப் பண்ணைப் பாடி, பற்றுறுதியை எடுத்துக்கொண்டனர். ஆனால் கல்லூரிப் பாடலை அவர்கள் பாடவில்லை.

தெம்பனிஸ் தொடக்கல்லூரி, மெரிடியன் தொடக்கக்கல்லூயின் கொடிகள் இறக்கப்பட்டன. அதையடுத்து, புதிய தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக்கல்லூரியின் கொடி ஏற்றப்பட்டது.

"இரு தொடக்கல்லூரிகளின் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் நாம் தொடர்கிறோம் என்பதை நினைவூட்ட புதிய கொடி ஏற்றுப்பட்டுள்ளது," என்று தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக்கல்லூரியின் முதல்வர் திருவாட்டி பெமலா யூங் மாணவர்களிடம் தெரிவித்தார்.

கொடியேற்று விழாவில் புதிய தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக்கல்லூரி மாணவர்கள். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இணைக்கப்பட்ட தொடக்கக் கல்லூரியில் பயில மிகுந்த ஆவலுடன் இருப்பதாக தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக்கல்லூரி மாணவரான 27 வயது அப்துல் கயூம் ஸக்கி ஸுல்கிஃப்லி தெரிவித்தார்.

கல்லூரியின் முதல் நாளில் கொடியேற்று விழாவுக்குப் பிறகு எடுத்தவுடன் பாடங்கள் கற்பிக்கப் படவில்லை.

மாறாக, தெம்பனிஸ் மெரிடியன் தொடக்கக்கல்லூரியின் 850 மாணவர்கள் அனைவரும் கல்லூரி உணவகத்தில் கூடினர். அங்கு அவர்களுக்குக் காலை உணவு வழங்கப்பட்டது.

ரொட்டி வகைகள், பிஸ்கெட்டுகள், பழங்கள் ஆகியவற்றுடன் மைலோ பானம் பரிமாறப்பட்டன.

அதுமட்டுமல்லாது, ஆண் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான நட்புமுறை காற்பந்து ஆட்டத்தைக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் கண்டு களித்தனர்.

விசாரணைக்கு உட்படும் ஆறு கேளிக்கை விடுதிகள்

கிளமெண்டி போலிஸ் பிரிவு கடந்த டிசம்பர் மாதம் 17ஆம் தேதியிலிருந்து 25ஆம் தேதி வரை நடத்திய ஒன்பது நாள் குற்றத் தடுப்பு, அமலாக்க நடவடிக்கையில் உரிம நிபந்தனைகள் அடிப்படையில் ஆறு கேளிக்கை விடுதிகள் விதிமுறைகளை மீறியிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ஆறு கேளிக்கை விடுதிகளின் உரிமையாளர்களிடம் போலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விதிமுறைகளை மீறிய குற்றத்துக்காக கேளிக்கை விடுதிகளுக்கான சட்டத்தின் கீழ் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆள் மாறாட்டம், மிரட்டுதல் ஆகிய குற்றங்களைப் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் 35 வயது ஆடவரை போலிசார் கைது செய்துள்ளனர்.

அதிகாரிகள் நடத்திய ஒன்பது நாள் நடவடிக்கையில் தொழிற்பேட்டைகள், குடியிருப்புகள், கேளிக்கை விடுதிகள் ஆகியவை சோதனையிடப்பட்டன. மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் ரோந்துப் பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது மொத்தம் 422 பேர் சோதனையிடப்பட்டனர். எதிர்வரும் சீனப் புத்தாண்டு விடுமுறைக் காலத்தின்போது குற்றங்களுங்களுக்கு எதிராக விழிப்புடன் இருக்கும்படி பொதுமக்களிடம் போலிசார் கேட்டுக் கொண்டுள்ளனர்.